


# மனோன்மணிய மான்மியம்







ஐங்கரன் விக்கினேஸ்வரா



# அம்மம்மா நினைவலைகள்



# அம்மம்மா நினைவலைகள்

- நவீனன் -

ஐங்கரன் விக்கினேஸ்வரா


வைகறை வெளியீட்டகம்

# "அம்மம்மா நினைவலைகள்"

—திருமதி மனோன்மணி தர்மலிங்கம்
31ம் நாள் நினைவஞ்சலி வெளியீடு—

முதற்பதிப்பு: : 2000 தை 20
வெளியீடு: : வைகறை வெளியீட்டகம்
ருஷ்யா.

வைகறை வெளியீட்டகம்:
P.O.BOX-45,
SMOLENSK,
214019,
RUSSIA.



# தரணி புகழ் பைந்தமிழ
# பழம் பெரும் பரம்பரையின்
# உயிருக்கு உயிருட்டிய
# ஆச்சியம்மா நினைவாக!


என்னை வளர்த்த என் பாட்டிக்காய்... 07
எந்தன் அம்மம்மாவே?.. எப்படி உங்களை மறப்பேனோ? 10
இன்னமுமாய் நினைவிருக்கு! 14
இனி வருமோ அந்த அல்வாயின் நாட்கள்... 18
மனோன்மணிய மகிமை 21
ஆருயிர் அன்னைக்கு அன்பு மகள்களின் புலம்பல் 35
அன்புத் தாய்க்கு அருமை மகனின் புலம்பல் 37
இனிய மாமிக்கு மருமக்களின் புலம்பல் 39
பாட்டியை இழந்த பேரர்களின் விருத்தம் 41
பூட்டியை இழந்த பூட்டப்பிள்ளைகளின் வருத்தம்.. 43






## என்னை வளர்த்த
## என் பாட்டிக்காய்...

நிலாவைக் காட்டி அன்னம்
இட்ட அன்புப் பாட்டிக்கு!
வானத்தின் ஒவ்வொரு
நட்சத்திரங்களில் இருந்தும்
தேவ தூர்தர்கள்ால்
வரவழைக்கப்பட்ட
அன்புக் குழந்தையாய்
நீ ஊட்டி வளர்த்த
என் - தேகம்
உன் பாசப் பரிசத்தின்
பிரியாத இதயப் பரிசாக
என்றும் என்னினுள்...

வட்ட நிலாவையும்
சுட்டெரிக்கும் சூரியனையும்

சுதந்திர வானில்
பறந்து திரியும் வானம்பாடிகளின்
உணர்வோடு உவமை
கொண்டு எனக்கு
முற்றத்து வெண்மணலில்
அரிச்சுவடியை ஆழமாகப்
படிப்பித்தவள் - என் பாட்டி

காட்டையும் கடலையும்
வானையும் மண்ணையும்
ஆண்ட வீரத் தமிழ்
மன்னரின் தீரத்தை
தீஞ்சுவையோடு - இளங்
கொழுந்தான எனக்காய்
தமிழ் மானத்தை
ஊட்டி வளர்த்தவள்
என் பாட்டி...

நேற்று வரைக்காய் இருந்த
சுதந்திர மண் - இதய பூமி
கயவர் கொடூரர்களால்
காவு கொள்ளப்பட்டதனையும்
அறிவோடு இளம் மனதில்
எனக்காய் இனமானத்தை
அறிந்து தெளிவித்தவள்
என் பாட்டி...


சாதியும் சமயமும்
தீண்டாமையும், தீயதையும்
தீட்டிய பட்டையாய்
என் மனதிலிருந்து
தூக்கி எறிய வைத்தவள்

என் இனிய பாட்டி...

சங்கிலியனையும், எல்லாளனையும்
உரமிட்டு என் உளத்தினில்
உளங் கொள்ள வைத்தவள்
என் பாட்டி...
காக்கை வன்னியனையும்
எட்டப்பர்களையும்
காட்டிக் கொடுக்கும்
கயவர்களையும்
கணக்கிட்டே களங்காட்டியவள்
என் பாட்டி...

உன் வாழ்நாளில்
சந்திக்காத சுதந்திரத்தை
நாளைய நாமாவது
சுவாசித்திட வீரத்தை
நேசத்தினில் அனலாயிட்டு
வளர்த்தவள் என் பாட்டி...

உன் புரதம் பட்டமண்
எங்கள் மண்...
நீ வளர்த்த இனமானக்
குழந்தைகள் நாங்கள்
வயோதிபத்தில் நீ இன்று
நிறைவு கொண்டிருக்கலாம்...
விடுதலையாகும் என் தேசக்
கனவுகளில் நீ வளர்த்த
நானாவது சுதந்திரமாய்
சுவாசித்திடுவேன்...



# எந்தன் அம்மம்மாவே?..
# எப்படி உங்களை மறப்பேனோ?

என்ன என்று கூறி
உங்களை மறப்பது எந்தன்
அம்மம்மாவே?..
முற்றத்து மாமர நிழலில்
அம்புலி மாமாக் கதை கூறி
ஆராரோ ஆரிவ்ரோ
பாட்டும் பாடி
அன்னமிட்ட உங்கள்
அன்புக் கரங்களை எப்படி
மறப்பேனோ?..

பின் வளவு கிணற்றடிக்
கட்டினிலே கால் தவறி

இடறி விழுந்தறுவாயிலும்
அலறாது பதறாது என்னைக்
கவனமேயென கட்டித் தூக்கி
காலங்காலமாய்
எங்களை வாழ்வித்தவரே
எந்தன் அம்மம்மாவே?
எப்படி உங்களை மறப்பேனோ?

பௌர்ணமியிலும், அமாவாசையிலும்
பல கதைகள் பலதுமாய் கூறி
பயத்தினை முழுவதுமாய்
தூக்கியெறிய வைத்தீரே
மழைக்கால மாரி காலத்தில்
காகிதக் கப்பல் கட்டி
அன்பின் துறைக்கே
தண்டு வலித்தே
துணை கொண்டீரே!
நித்தம் நித்திரை விட்டெழுகையில்
சூடான ஆட்டுப்பால் சுவையுடனே
இனிப்பூட்டும் பனங்கட்டியுமாய்
ஊட்டிய உங்கள் கரங்களை
எப்படி மறப்பேனோ?

சுத்தம் சுகமே வாழ்ந்திட
குளிர்ந்திடும் கிணற்று நீரினிலே
குளிப்பாட்டியுமே
நேரந் தவறாது உணவூட்டிய
அன்புக் கைகளை எப்படி
மறப்பேனோ?..

தொட்டில்ப் பழக்கமே சுடுகாடு
வரையென கடிக்கும்

எறும்பைக் கொல்வது கூட
வேண்டாமென
நன்னெறி பலதும் ஆத்திசூடி
ஔவையாராக நற்தமிழை
எமக்குக் கற்பித்தவரே
உங்களை எப்படி மறப்பேனோ?
இனி
எப்படி மறப்பேனோ?

அடிவளவு தென்னங் கன்றுக்கு
தண்ணீர் ஊற்றியே வளர்த்தது போல்
அன்பையும் அறனையும் நலதே
சொல்லித் தந்தே
எம்மை வளமே
தமிழனாய் வலுப்படுத்தியே வாழ்ந்தவரே..
இன்னும் சொல்வதற்கேது
சொற்கள் ஏது உண்டு?
சொற்கள் கூட
வறுமை கொண்டிருக்கும்
உங்கள் அன்பின் முன்னிலையில்
ஆயினும்
ஆயினும்
எப்படி உங்களை மறப்பேனோ?

குழந்தையாயிருந்து வாலிபனாகிய
பின்பாயும் உங்கள்
அன்பினில் தான்
ஏதேது குறைவு?
தமிழுக்காய் தொண்டாற்றிட
தாய்த் தமிழ் மண்ணைக்
காத்திட- நீவீர் ஊட்டி வளர்த்து
உரமேற்றியே நாங்கள்

உங்கள் பரம்பரையில்
முகிழ்ந்ததனையிட்டு
முகம் மலருகின்றோம்..

ஐந்து கரத்தான், ஆனைமுகத்தனையும்
சொற்றுணை வேதியன்
சோதி வானவனையும்
நல் இனிய வயதினிலே
நலமே மனதிலே பதியும் படியாய்
தேமதுரத் தமிழை தித்திப்பாய்
ஊட்டியவள் நின்னை
எப்படி மறப்பேனோ?
ஆயினும்..
ஆயினும்
எப்படி மறப்பேனோ?
அகர முகர எழுத்தெல்லாம்
ஆதி பகவான் முதற்றே உலகென
எந்தன் கரங்களை
தமிழுக்காய் நல்வலிப் படுத்திய
உங்களை
எப்படி மறப்பேனோ?
எப்படி மறப்பேனோ?



## இன்னமுமாய் நினைவிருக்கு!

கொண்டலடிப் பிள்ளையாருக்கு
பெருங் கதை கூறி
வட்டம் வட்டமாய்
வடை மாலை பல போட்டு
சுண்டலும் அவியலும்
நாவினில்
சுவைத்த காலமும்
இன்னமும் நினைவிருக்கு!...

அம்மம்மா இன்னுமுமாய்
பெரியம்மம்மா - ஆச்சியம்மாவின்
அக்காள் ராசாத்தி...

காலைப் பனி
அறுகம் புல்லின்
நுனிகளில் ஒட்டிக்
கொண்டிருக்கும்...
பாலைத் தரும் பசுவின்
சாணகத்தில்
பிள்ளையார் பிடிச்சு
அதன் நடுவே
அறுகம் புல்லை ஆணித்தரமாய்
நட்டு
அழகு பார்த்த காலம்...
ஏன் அம்மம்மா
பிள்ளையாருக்கு
சாணகம் பிடிக்குமா?..
அறுகம் புல் பிடிக்குமா?..
இரண்டையும் கலந்து
கொடுப்பது ஏன்? எனக்
கேட்ட காலமும்
இன்னமும் நினைவிருக்கு!...

அம்மம்மாவின் அக்கா
ராசாம்மா...
எங்களின் பெரியம்மம்மா
வெற்று வெள்ளைத்தாளில்
ஈர்க்குத் தடியின்றி
காற்றாடிப் பட்டங் கட்டித்
தருவதில் ஒரு வல்லவர்...
பெரியம்மம்மா நினைவுமாய்
இன்னமும் நினைவிருக்கு!...

நாட்சார் வீட்டு
நடு முற்றத்தில்

கொழு கொழுவாய்
கொட்டிக் காய்க்கும்
கொய்யாய்ப் பழம் தின்ற
நாட்களும் இன்னமும்
நினைவருக்கு...

பெருமாள் கோவில்
புரட்டாதிச் சனியிலே
எண்ணெய்ச் சட்டி எரிக்கப்
போய்
கையிலே தீச்சூடு வாங்கியதும்
இன்னமும் நினைவிருக்கு!...


தை பிறந்தால்
வழி பிறந்திடுமேயென
பட்டாசும், வாண வேடிக்கையுமாய்
கழியும் நாட்களிலே
பால் தரும் பசுக்களுக்கு
பட்டிப் பொங்கல்
பொங்கிடும் எந்தன்
பாட்டியையும்
இன்னமும் நினைவிருக்கு!...

மாட்டுப் பொங்கலாய்
வெள்ளை அரிசிப் பொங்கலும்
நாவினில் இன்றுமாய்
இனித்திடும்
பட்டிப் பொங்கலின் முற்ற வெளிச்
சவாரியுமாய்
இன்னமும் நினைவிருக்கு!...

தேனைக் கலந்து

பின் வளவு விளாங்காய் மரத்தின்
விளாம் பழங்களை
நக்கித் தின்றதும்
அடி வளவில்
இராவில் சென்றால்
பிசாசு விரட்டும் என
பயமூட்டி பயந்து படுத்த
நாட்களும் நினைவிருக்கு...
இன்னமும் நினைவிருக்கு!...





## இனி வருமோ
## அந்த அல்வாயின் நாட்கள்...

அல்வாய்க்குச் சென்று
ஐயாவின் அம்மாவாம்
ஆச்சியைக் கண்டு
அன்பாய் அவர்
சுட்டுத் தரும்
பருத்தித்துறை வடை
உண்டு கழித்த
நாட்கள்
இனி வருமோ?...

வல்லை வெளி கடந்து
குஞ்சர் கடைச் சந்தியிலே
எள்ளுருண்டையும்
பாணிப் பினாட்டுமாய்
நாக்குகள்
இனித்த காலம்
என்று தான்
இனி வருமோ?...

நெல்லியடி 'நஷனல் கபே'யிலே
சுடச் சுட சுட்டு வைக்கும்
கீரை வடையை
ஐயாவுடன் 'பிளேன் டீ'
குடித்த காலங்கள்
இனித் திரும்ப
வருமோ?
இனி வருமோ?...

அல்வாய் ஆச்சி
போன பின்புமாய்
பெரியார் பகுதியில்
பெயர் கூறும்
பேரறிவாளர்
தர்மலிங்கம் பேரன்
என ஊரே
புகழ் கொள்வதில்
மனப் புலகாங்கிதம்
அடைந்த மாலைப் பொழுதுகள்
தான் இனி வருமோ?...
இல்லை
இனி வருமோ?...

மாலி சந்தி தாண்டி
அல்வாய் மாமி வீடு போய்
அடுப்படியிலே
சுடச் சுட தோசையும்
பச்சை மிளகாய்ச் சம்பலும்
உண்ட பின்
வாய் எரிய
அழுதழுது கிணற்றுத் தண்ணீர்
குடித்த
நாட்களும்மாய்
இனி என்றோ
இனி வருமோ?...

வல்லிபுரம் கோயில் போய்
சோளக் காற்று வீசிடும்
சுடு மணலில்
கச்சானும் சோளப் பொறியும்
தின்ற நாடகள்
எல்லாம் நினைவினிலே
வந்தெழும்
இனி வருமோ?...
அந்த நாட்கள்
இனியும் வருமா?...

•



# மனோன்மணிய மகிமை

மண்ணில் முகிழ்ந்த
மாணிக்க முத்தே
விண்ணில் மிளிர்ந்த
எழில்த் தாரகையே
கண்ணின் இமைபோல்
எமைக் காத்தீரே
பொன்னின் சிறப்பாய்
நலமே வாழ்ந்தீரே

பெருமை கொள்ளும்
புதுயுக வாழ்வினிலே
அருமை உங்கள்
அவனியில் அவதரிப்புமே
சிறுமை தணிந்தே சீற்றம்
பெற்றே சிலிர்த்திடவே
கருமை நீங்கியே வெண்
வானமும் மிளிர்ந்ததோ

இனிமை தமிழ் ததும்பும்
வீர யாழ் நகரினிலே
எழிமை கொள்ளும்
ஏராளன் மயில்வாகனமும்
செழிமை பொங்கும் செந்
தமிழிச்சி சிவக்கொழுந்தும்
புதுமை கொண்டே கரங்
கோர்த்தே மகிழ்ந்தனரே

நல்லை நகர் சூழ்
நல்லினிய ஊரிலே
தொல்லை ஏதுமேயில்லா
தித்திக்கும் வாழ்வுமே
எல்லை அவர்க்கேது
மாந்தர்ச் செல்வதத்துக்காய்
கல்லைக் கனிய
வைத்தே வாழ்ந்தனரே

தென்னை பனை விண்ணை
முட்டும் அழகுமே
பண்ணைக் கடலோரம்
பாயும் மீன்களுமே

வெண்ணை வழிந்தோடும்
செல்வச் செழிப்புடனே
மண்ணை மதித்தே
எங்கும் வாழ்ந்தனரே

மயில்வாகனம் பெற்றெடுத்த
மாட்சிமை மகளாய்
சிவக்கொழுந்தின் இனிய
இளைய செல்வமாய்
குடும்பமே கோயிலாய்
விழாக் கொள்ளும்
கோடி புகழும் அவர்
தம் வாழ்வினிலே மலரும்

தொடு வானம் இல்லை
கடலோடு ஒன்றியதாய்
நெடு வேகங் கொண்டே
வளர்ந்திட்ட மனோன்மணி
படு சுட்டி பள்ளிப்
பாடங் கற்பதனிலே
கடுகதியாய் தேவாரத்
திருவாசகம் படிப்பதிலுமே

தரணியில் அவதரித்த
மனோன் மணியுடனே
ஈர் ஐந்து சகோதர
சோதரங்களுடனே
கல்வியும் செல்வமுமாய்
கழிப்புடனாய் வாழ்ந்தனரே
பரணியும் புகழ்ந்தது
அவர்தம் வாழ்வினையுமே

நாற்திசையும் புகழும்
பழம்பெருந் தமிழினை
நாவினிலும் இனிதே
நலமே கற்றே
தேனிலும் சுவைத்திட
சிறப்பே உயர்ந்தே
நானிலத்தில் நலமே
வாழிய வாழ்ந்தன்ரே

பாக்கள் பலவும்
பாடி மகிழ்ந்தனரே
நாக்கள் நன்றே
தேவாரங்களைப் பாடியுமே
வாய் மணக்கும் வண்ணத்
தமிழைப் பேசியே
நோய் நொடியுமின்றியே
நலமே வாழ்ந்தனரே

ராசம்மா எனும்
மூத்த சோதரியுடனுமே
சுந்தரம் பெரும்
புகழ் சகோதரனுடனே
பரந்தாமன் நல் இனிய
சொந்தங்களுடனுமே
இல்லமே இனிதே
சிறப்புற்று வாழ்ந்தனரே..

கொடுமை என்றதொரு
சொல்லை மறந்தே
அடிமை செய்யும் எஜமானத்
தனமுமின்றியே

பெருமை போற்றும்
நீராவியடியினிலே
அருமையாய் அன்பாய்
வாழ்வும் வாழ்ந்தனரே

இளவயது மங்கையானாள்
மாதரசி மனோன்மணி
களமீதினிலே காளையர்
கண்களும் மொய்த்தனவோ

மலை மேலினிலே மலர்ந்த
வெண் நிலாவாய்
நில மீதினிலே நாணம்
கொள்ளும் அழகியானார்

அன்பும் அறமும்
அகமே மலர்ந்தே
பண்பும் பாரம்பரிய
புகழுடனும் வாழவே
என்றும் இனிய வாழ்க்கைத்
துணையாய்
நன்றே மணந்தாள்
தர்மலிங்கத்தை...

வீர வடமராட்சி அல்வையம்
பதியினிலே
கந்தையா தங்கமுத்துவின்
மூத்த முதல்வனாய்
நேய மிகுந்த நேரிய
கல்வியின் உயர்வினால்
பல்கலைக் கழக பட்டத்தையும்
பெற்ற தர்மலிங்கம்.

ஆய கலைகள் அறுபத்தி
நான்கினையும்
தூய மனதுடன் உள்ளமார
உயர்வாய் கற்றே
மான உயர்வாளன்
மணாளன் தர்மலிங்கம்
போன இடமெல்லாம் புகழ்
கூறும் கல்வியாளன்

அல்வையம் பதியின் கல்விக்
கலங்கரை விளக்கும்
நீராவியடியின் நிறையழகு
மாதரசியும்
காதல்க் கண்ணா கண்டே
ஓருயிர் கொண்டே
இல்லறம் சிறக்கவே
இனிதே வாழ்ந்தனரே

மனோன் மணியின்
இருபத்தியேழாவது அகவையில்
இல்லற வாழ்வில்
மாந்தர்ச் செல்வன்
தர்மலிங்கத்தை மணதார
மணந்தே
நல்லறம் போற்றியே
வாழ்வில் சிறப்புற்றனரே

வடமராட்சியின் முதல்
விஞ்ஞானப் பட்டதாரியாய்
நெல்லியடி மகா வித்தியாலய
அதிபராய்

முல்லைத்தீவிலும் முதன்மை
அதிபதியாய்
கல்வியிற் கலங்கரை
விளக்காய் தர்மலிங்கம்

வானகம் போற்றியே
அவர் தன்மை வாழ்த்திடவே
கானகம் சென்றும்
கல்வியைப் போதித்தாரே
தேனகம் எங்கும்
தர்மலிங்கம் புகழ் பரவவே
மணவகம் வாழ் மனைவியும்
என்றும் மகிழ்ந்தாரே

என்றும் வாழும் இனிய
தமிழுக்காய்
நன்றே பல தமிழ்
மாணவரை உருவாக்கியே
வென்றும் வந்தாரே
பல பட்டங்களையுமே
இன்றும் அவர் புகழ்
ஒளியும் பிரகாசித்திடுமே

வாழும் வாழ்வு
வளமுடன் சிறந்திடவே
காணும் பொழுதெல்லாம்
முகம் மலர்ந்தே
வேலை அற்றோர்க்காய்
உதவியும் புரிந்தே
ஏழை உளமுற்றோர்க்காய்
உதவியும் கொடுத்தாரே

அருமைத் துணைவன்
அன்பின் உறவினால்
பெருமை கொள்ளும்
மக்கட் செல்வங்கள்
முதன்மை மகளாய்
விமலா தேவியும்
நிறைவுடனே பெற்றெடுத்தனர்
ஞானாம்பிகையுமே

சொந்தம் பலவும் பெரும்
புகழ் கொள்ளவே
பந்தம் கொள்ளும்
பரம்பரை நிறையவே
செல்வங் கொழித்திடும்
மாண்பு மகனாய்
சிவஞான சம்பந்தனையும்
சிறப்பே பெற்றெடுத்தனரே

எந்தம் தாயகம்
படுந்துயர் கண்டே
நித்தம் உங்கள்
மனதும் துடித்திடுமே
எச்சம் காக்கும் தமிழ்
தலைமுறை வாழ்ந்திடவே
அச்சம் இன்றியே ஆருயிர்
மழலைகளை வளர்த்தீரே

விமலாதேவி கரம்
பிடித்த வைத்தியக் கலாநிதி
வித்தைகள் பலதும் தெரிந்த
விஞ்ஞானமும் கற்ற

பரமநாதன் தங்கரட்ணம்
பெற்றெடுத்த மைந்தன்
விக்னேஸ்வராவிற்கு அன்பு
மாமியாரானீர்களே

ஈன்ற பயனை இனிதே
வையத்துள் வாழ்ந்திட
தோன்றும் புதிய தலைமுறை
நிமிர்ந்தே எழுந்திட
ஆச்சியம்மா அன்பான ஆருயிர்
அருமைப் பேத்தியாய்
ஆறு பேரர்களும் அவனியிலே
அழகு கொண்டனரே

மனோன் மணியின் மகிமை
சொல்லும் பரம்பரையிலே
அருணா பேசிடும்
அழகுத் தமிழிலும்
குமாரராஜன் பாடிடும் பைந்
தமிழ் பண்ணிலும்
அமுதன் செய்திடும்
விந்தையான வித்தையிலும்

ஐங்கரன் படைத்திடும்
பாக்கள் பல்தாலும்
அகிலா ஆடிடும்
அபிநய நாட்டியத்திலும்
அரவிந்தன் அழகுறும் இனி
தமிழ் உயர்விலும்
பேத்தி மனோன்மணி பேணிக்
காத்தாரே பேரர்களை

போற்றிப் புகழ்கிறோம் உங்கள்
பொற் பாதங்களை
நேற்று வரையிலா மட்டுமல்ல
என்றுமாகவே
மாற்றங் காணும் இந்த
மானிட வாழ்வினிலே மீள
தோற்றங் கொண்டிடுவீர்
இன்னொரு தடவையாய்

இளைய மகளின்
இல்லறஞ் சிறந்திடவே
ஞானாம்பிகை கைகோர்த்த
வணிகப் பட்டதாரி
கணேசனுடன் வாழ்வும்
நலமே வளமுறவே
நாவில் எழுந்திடும் நல்ல
தமிழ்ப் பாக்களே

சங்கத் தமிழின் சரித்திரக்
கதை பல கூறி
சிங்கத் தமிழனாய் வாழ
வீரங் கூறியே
எங்குந் தமிழை உரத்தே
உயர ஒலித்திட
பொங்கும் எங்களின்
மனமும் புதுமையாய்

இன்பம் பொங்கும்
இனிய வேளையினிலே
துன்பம் வரும் போது
கரங்கொடுத்து உதவியுமே

சொந்தம் எல்லோரும்
சுகமாய் வாழவே
அன்பும் என்றுமாய
அகத்தினிலே மலர்ந்திடுமே

மாட்சிமை மனோன்மணியின்
மகுட மைந்தன்
சிவஞான சம்பந்தன் தொழில்
நுட்பம் பல கற்று
மணப்பந்தலில் மணமகனாய்
இனிய இல்லறத்தான்
மங்கையர்க்கரசியுடன் புது
வாழ்வும் புகுந்தாரே

தாய்க்கு ஒரு தனயனாய்
தாயகம் சூழ
தன்னிகரில்லா தாய்மைக்கு
அன்புங் கொண்டே
சிவஞான சம்பந்தன்
பெற்றெடுத்த சுஜேந்தினியும்
ஆருயிர்ப் பேத்தியாய்
அணைத்துக் கொண்டாரே

பாரினில் வாழ்ந்த புலந்
தமிழ் பெருங்குடி
படும் பாடு கண்டே
கண் கலங்கியே
நீசர் அவர் கொடுமைக்
அழியாதோ
நேசம் மிகு காரங்கள்
என்று தான் நீளுமோ?

போரும் சாவுமாய் எங்கள்
சந்ததி அழிகையிலே
வேரும் முகிழ் விட்டே
கிளைத்து விருட்சமாய்
நீங்கள் தந்த வைராக்கிய
மனத்துடனே
நாங்கள் எழுகின்றோம்
தன்மானத் தமிழராய்

தாய்க்குத் தாயாய்
தரணியிலே அவதரித்தே
வாய்க்கு நல்ல வண்ணத்
தமிழை உரைத்தே
காய்க்கும் பழ மரங்களை
நாட்டியுமே
நோய்க்கு பல மருந்தும்
தந்திடுவீர்களே

அன்பின் உருவாள
ஆருயிர் அம்மம்மாவாய்
பேரர் உங்கள் புகழ்
பரப்பிடவே
பூட்டியின் புனித முகங்
காண் ஆவலில்
சரித்திரம் படைக்கும்
சந்ததி தொடர்ந்ததே..

அருமைப் பேத்தி அருணா
கரம் பிடித்த காதலன்
வைத்தியக் கலாநிதி நந்த
கோபாலனுக்கும்

புதிய சந்ததி எங்கும்
நிலைத்து நீடித்திடவே
பூட்டியாய் பூமியில்
பிறப்பெடுத்தாள் துளசியுமே


ஆருயிர் பேரன் அமுதனின்
உற்ற உயிரான
காதல்த் துணைவி
பத்மாவதி பெற்றெடுத்த
அஞ்சனின் அன்புப் பூட்டியுமாய்
காலங் காலமாய்
எங்கள் சந்ததி நிலைத்து
உயிர்க்குமே

மார்கழித் திங்கள்
இருபத்தியோராம் நாளினிலே
சொர்க்கத்தின் வாசலுக்குள்ளும்
நுழைந்தீரோ
உலகம் உள்ளவரை
உங்கள் நினைவினிலே
நித்தம் உங்கள் நினைவெழும்
எம் மனதினிலே

உற்றம் உறவினர் புரண்டு
அழுதிடவே
சுற்றம் ஊரவர் சுமைதாங்கியை
இழந்திடவே
சொந்த நெஞ்சங்களும்
சோகமாயிடவே - உயிர்
பந்தம் தீயினிலே
ஆகுதியாகினீர்களோ

மனோன்மணி மகிமை
பல பாக்களாய்
சிரோன்மணி செழிமை
நல் வரிகளாய்
அம்மணி எங்களின்
அம்மம்மா நினைவுகளாய்
பெண்மணி அவர்
பெருமை போற்றுவோமே

போற்றி போற்றி மனோன்மணி
மகிமை பொழிந்தே
போற்றி போற்றி மனோன்மணி
வரலாறு கூறியே
போற்றி போற்றி மனோன்மணி
புகழ் பரப்பியே
போற்றி போற்றி மனோன்மணி
பெருமை பாடியே




## ஆருயிர் அன்னைக்கு அன்பு மகள்களின் புலம்பல்

அன்பினில் உருவான
அருமைத் தாயே
பண்பினில் தோன்றிய
பைந்தமிழ் மாதாவே
மாண்பினிலே மகுடம்
சேர்த்த மாமணியே
தோன்றினில் உமைப்போல்
அவதரிக்க வேணுமே

பொதுமை கொண்டே
பொங்கும் தமிழிச்சியாய்
புதுமைப் பெண்களாய்
எமைப் படைத்தீரே
ஏழிமை என்றும் உங்கள்
வாழ்வினிலே
செழிமை தோன்றும்
கொவ்வாய்ச் சிரிப்பினிலே

இனிய எங்கள் அன்புத்
தாயே - பூங்
கனியாய் நாங்கள்
இனிதே மலர்ந்திடவே
பாரினில் பலரும்
போற்றிய பெண்ணாய்
நானிலம் போற்றும்
நற்தாயாய் வாழ்ந்தீரே

அருமை எங்கள் அன்புத்
தாய் கிடைக்கவே
பெருமை கொள்கிறோம்
உங்களின் மகள்களாய்
போற்றுகின்றோம் உங்கள்
பொற் பாதங்களை
வணங்குகின்றோம் உங்கள்
இன் முகத்தையே..



# அன்புத் தாய்க்கு
# அருமை மகனின் புலம்பல்

என்றும் எல்லையில்லா
அன்புத் தாயாகவே
தோன்றும் பொழுதினில் உங்கள்
மகனாய் அவதரிக்கவே
இன்றும் உங்கள்
அழியா நினைவுகளிலே
வென்றும் விரைகிறேன் உங்கள்
வரலாற்று வாரிசாய்

ஆய கலைகள்
அறுபத்தி நான்கினையும்
நேய உணர்வுடன்
எனக்காய் கற்பித்தே
தூய மனிதனாய்
என்றும் வாழ்ந்திடவே
மானங் கொள்ளும் தமிழனாய்
உணர்வூட்டினீர்களே

மெய்யகம் மீதினிலே
மதிப்புங் கொண்டிடவே
வையகம் புகழ்ந்தே
உயர்ந்து வளர்ந்திடவே
மண்ணகம் தன்னில்
மைந்தன் நானிருக்கையிலே
விண்ணகம் மேலாய்
நீங்கள் விரைந்து சென்றீரோ..




# இனிய மாமிக்கு
# மருமக்களின் புலம்பல்

தென்றலைச் சுமந்து
வரும் வசந்தமாய்
அன்பினைப் பொழிந்திடும்
இனிய மாமியாய்
வைகறைப் பொழுதினில்
புதிய முகாரியாய்
துயரினைத் தீர்க்கும்
திடமிகு மாமியாய்

வேற்றுமை தணிந்தே
பாரினில் வாழவே
ஒற்றுமையே உயர்வாய்க்
கருதிய மாமியாய்
நேற்று வரையில் உங்கள்
இன்முகம் சிரித்தே
தேற்றுகின்றோம் இன்று
உங்கள் பிரிவினாலே

நோன்புகள் பலதும்
நேர் கொண்டே
வையத்துள் வாழ்ந்த
வளமிகு வாழ்வினை
கூற்றுவன் உங்களை
கொண்டு சென்றானோ
போற்றுகின்றோம் உங்கள்
பெருமைமிகு வாழ்வையுமே..



## பாட்டியை இழந்த
## பேரர்களின் விருத்தம்

வரிகளுக்கு சொற்களைச்
சேர்த்து கவிதையாக்கலாம்
நிலாவிற்கு வண்ணந்தீட்டி
அழகு சேர்த்திடலாம்
மரத்திற்கு இலைகள்
துளிர்த்தும் முகிழ்விடலாம்
ஆகாயத்திற்கு வானவில்லும்
வர்ணம் பூசிடலாம்
அன்புக்கு எங்கள் இனிய
அம்மம்மாவே அர்த்தமாகிடலாம்
பாசத்திற்கு அவர் பண்பே
என்றும் பரிசமாகலாம்

கடலிலே அலைகளற்ற
அமைதியாய்
வானத்தில் பாடும்
வானம்பாடி சிறகிழந்ததாய்
வையத்துள் உயிர் ஜீவிகள்
மூச்சிழந்ததாய்
துயரங்களுக்கே தெரியாத
சோகமாக
உங்களை நாங்கள்
இழந்த இழப்பு
அருமை ஆச்சியம்மம்மாவை
இழந்த இழப்பு
கவிதை வரிகளில் தான்
சோகம் புரியுமோ?

❀



## பூட்டியை இழந்த பூட்டப் பிள்ளைகளின் வருத்தம்..

பூட்டியின் புனித
முகங் கண்டிடவோ
பொன்னான இனிய நாட்களும்
எனி இல்லையோ?..
நாட்களும் பல
சென்றிடவோ
நன் நாள் இனி
என்று வந்திடுமோ?..

காலங் காலமாய்
உங்களின் நினைவினிலே
காத்திடும் வரையில்
உங்களைக் கவர்ந்தனரோ..
இன்றுங் கூடவே
உங்களை நினைத்துமே
போற்றி மகிழ்கின்றோம்
பூட்டியை என்றுமாய்..

விண்ணில் உங்கள்
வாழ்வும் சொர்க்கமாயிட
மண்ணில் இருந்தே
மனதார வாழ்த்துகிறோம்..
பொன்னிலும் நல் ஆருயிர்
அன்புப் பூட்டியாய்
கண்ணினால் உங்களைக்
காணக் கிடைக்கவில்லையே..

மாறுதல் வந்திடும்
இந்த மானிலத்திலே
ஆறுதல் எமக்குக்
கூறிட யாருண்டு?..
நானிலம் போற்றியே
என்றுமாய் புகழ்ந்திட
காணத் துடித்தோமே
உங்கள் இன் முகத்தினையே!..









அமரர். கந்தையா தர்மலிங்கம்
தோற்றம் -13.10.1910
மறைவு -30.04.1985

அமரர். மனோன்மணி தர்மலிங்கம்
தோற்றம் -27.07.1911
மறைவு -21.12.1999

**எனது கரங்களை மட்டுமல்ல,
உயிரையும் தமிழுக்காய் தந்த
என் இனிய தாத்தா, அம்மம்மாவை
எப்படி மறப்பேனோ?
எப்படி மறப்பேனோ?**

மனோன்மணிய மான்மியம் (திருமதி. தர்மலிங்கம் மனோன்மணி, அவர்களின் 2ம் ஆண்டு நினைவஞ்சலி வெளியீடு)

மீள்பதிப்பு-21.12.2001- வைகறை வெளியீட்டகம், ருஷ்யா.